(2024-25-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2)

**SUBJECT CODE 24 UTL 101**

**REG.NO:**

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : : பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : நவம்பர் – 2024**

**இளநிலை பட்ட வகுப்புகள்** **மதிப்பெண்கள் : 75**

**அரசு உதவி (கணிப்பொறியியல்/வணிகவியல் நீங்கலாக) மற்றும்**

**சுயநிதி (பி.ஏ.தமிழ் இலக்கியம் மட்டும்)**

**முதல் பருவம்** **நேரம் : 3 மணி**

## பகுதி – 1

## தமிழ்த்தாள் - 1

### பகுதி – அ (10x1=10 மதிப்பெண்கள்)

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **(K1)**

1. பாரதியார் பணியாற்றிய இதழ்கள் எவை?
   அ) சுதேசமித்திரன் ஆ) சக்கரவர்த்தினி இ) இந்தியா ஈ) அனைத்தும் சரி
2. வணக்கம் வள்ளுவ என்ற நூலின் ஆசிரியர் யார்?
   அ) ஈரோடு தமிழன்பன் ஆ) மயில்சாமி அண்ணாதுரை இ) தமிழ் நம்பி ஈ) தேனரசன்
3. சால்பு என்ற சொல்லின் பொருள் யாது?
   அ) சான்றாண்மை ஆ) பொறை இ) ஒழுங்கு ஈ) அன்பு
4. அந்த, இந்த என்பவை எவ்வகைப் பெயர்?
   அ) சுட்டுப்பெயர் ஆ) பண்புப்பெயர் இ) வினைப்பெயா ஈ) உரிப்பெயர்
5. பெருங்கதையின் வழிநூல் எது?
   அ) நாககுமாரகாவியம் ஆ) உதயணகுமாரகாவியம் இ)யசோதரகாவியம் ஈ) சூளாமணி

**அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு சொல் தொடரில் விடை தருக.** **(K2)**

6. துப்பாக்கி முனையில் பறிக்கப்படுவது என்ன?
7. பொருள் கூறுக–பிரபஞ்சம் , ரௌத்திரம்
8. பிரமிள் எந்நாட்டைச் சார்ந்தவர்?
9. பாக்கு என்பது எவ்வகைக் குற்றியலுகரம்?
10. மணிப்பிரவாள நடை என்றால் என்ன?

### பகுதி – ஆ ( 5 x 5 = 25 மதிப்பெண்கள்)

**கீழ்க்காணும் வினாக்களுக்குப் பயன்பாட்டுத்திறன் அடிப்படையில் (K3-Apply) இருபக்க அளவில் விடையளிக்கவும்.** **(K3)**

11. அ) பாரதத்தாயின் பெருமைகளைப் பாரதியார் எங்ஙனம் புகழ்ந்துரைக்கின்றார்?

(அல்லது)

ஆ) இயற்கையின் பேரூற்று, பெண்ணியத்தை எவ்வாறு வலியுறுத்துகிறது?

**(த.பி.பா)**

12. அ) ஔவையாரின் சான்றாண்மையை விளக்குக.

(அல்லது)

ஆ) யூகியின் மதி நுட்பத்தை எழுதுக.

13. அ) **இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

“கொடுத்தவரை பாடுவதெம் குலவழக்கம்
கொடைக்கெனவே படையெடுத்தோர் புலவர் பல்லோர்”

(அல்லது)

ஆ) “சரிகை சட்டை மேலே போட்டு
போராக எங்க மச்சான்”

14. அ) வல்லினம் மிகும் இடங்களைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

ஆ) வல்லினம் மிகா இடங்களை எடுத்தெழுதுக.

15. அ) வீரசோழியம், நேமிநாதம் - இலக்கண நூல்களைச் சிறப்பித்தெழுதுக.

(அல்லது)

ஆ) சிறுகதை வளர்த்த எழுத்தாளர்களைக் கூறுக.

**பகுதி - இ ( 5x 8 = 40 மதிப்பெண்கள்)**

**வினாக்கள் ஆய்தல் திறன் (K4/K5-Analysis) அடிப்படையில் அனைத்து வினாக்களுக்கும் கட்டுரை வடிவில் விடை தருக.**

16. அ) வாக்குச் சீட்டுகளுக்கு ஓர் அர்த்தம் வரட்டுமெனக் காத்திருக்கும் ஈரோடு தமிழன்பனின் உணர்வுகளைப் புலப்படுத்துக.

(அல்லது)

ஆ) காசிஆனந்தனின் காத்திருப்புக் கவிதை நாட்டுப்பற்றை எங்ஙனம் வெளிப்படுத்துகிறது?

17. அ) வெள்ளைத் தேனருவியின் அழகுணர்ச்சியை எடுத்தியம்புக.

(அல்லது)

ஆ) பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் காணலாகும் கல்விச் சிந்தனைகளை விவரி.

18. அ) கொங்கு நாட்டுப்புற மானுடவியல் பண்பாடு குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

ஆ) பயண உணர்வுகளை இயகோகா சுப்ரமணியம் உரைக்கும் பாங்கை ஆய்ந்துரைக்கவும்.

19. அ) மயிலைமாடு சிறுகதையின் கதைப் போக்கை இயம்புக.

(அல்லது)

ஆ) வாழ்வியல் தேவை குறித்து எஸ். ராமகிருஷ்ணன் கூறும் செய்திகளைக் கட்டுரையாக்குக.

20. அ) உறவுகள் என்ற தலைப்பில் கவிதை புனைக.

(அல்லது)

ஆ) உன்னையே வெல்வாய் எனும் தலைப்பில் சிறுகதை எழுதுக.



*******